# ஓர் இளம் விதவை ஒரு குடும்பத்தைப் பெறுகிறாள்

**ஜெபம்:** "கர்த்தாவே, ரூத், நகோமி, போவாஸ் ஆகியோரைப் போல் பிள்ளைகள் தங்கள் உறவினரை நேசிக்க உதவி செய்வீராக!"

மாபெரும் அன்பைப் பற்றிய கதைகளில் ஒன்றை போதிக்க ஆயத்தமாகவும். ரூத் 1-4 ஐ வாசிக்கவும்.



- ரூத்தின் மேல் போவாஸ் கொண்ட அன்பு, இயேசு தம்மை நேசித்து நம்மை எவ்வாறு மீட்டுக் கொண்டார் என்பதை சித்தரிக்கிறது.
- இந்தக் கதையில் நீங்கள் ஒருவாரம் தியானம் செய்ய வேண்டி இருக்கும் அல்லது சில பகுதிகளை மட்டும் கற்கலாம்.

ரூத்தின் கதையை ஒரு **பெரிய பிள்ளையோ ஆசிரியரோ** வாசிக்கட்டும் அல்லது மனப்பாடமாகச் சொல்லட்டும். ஒவ்வொரு அதிகாரத்தின் முக்கிய பகுதிகளையும் மூன்று அல்லது நான்கு சிறுவர்கள் கூறுமாறு செய்யவும்.

**அதிகாரம் 1 : விளக்குக:**

- ஒரு இஸ்ரவேலன் தன் மனைவியாகிய நகோமியுடனும், இரு மகன்களோடும் மோவாப் நாட்டிலே குடி இருக்க வந்தார். மோவாபிய பெண்களான ரூத், ஓர்பாள் ஆகியோரை இரு மகன்களும் திருமணம் செய்து கொண்டனர்.
- மூன்று ஆண்களுமே இறந்து, மூன்று பெண்களும் விதவைகள் ஆயினர். நகோமி உணவுக்காக திரும்பவும் இஸ்ரவேல் வர வேண்டியதாயிற்று.
- ரூத்தும், ஓர்பாளும் அவளுடன் வர விரும்பினர். ஆனால் அவள் அவர்களைத் தங்கள் பெற்றோரிடம் திரும்பிப் போகுமாறு கூறினாள்.
- ஓர்பாள் அழுது விட்டு பின் தன் பெற்றோரிடம் திரும்பிப் போனாள். ஆனால் ரூத்தோ, தன் மாமியை விடாமல் பற்றிக்கொண்டு, தானும் இஸ்ரவேல் வருவதாகக் கெஞ்சினாள். ரூத் இவ்வாறு தன் அன்பையும் நன்றி விசுவாசத்தையும் காட்டினாள்.

**அத்தியாயம் 2: விளக்கவும்:**

தானும் நகோமியும் சாப்பிட ரூத் போவாசின் வயலிலே தானியங்களைப் பொறுக்கினாள். அவன் அவளை பரிவோடும் மரியாதையோடும் நடத்தினான். இஸ்ரவேலின் பழைய சட்டப்படி ஏழை மக்கள் அறுப்பவர்கள் விட்டுச் செல்லும் தானியங்களைப் பொறுக்கிக் கொள்ளலாம்.

- தானும் நகோமியும் உண்ண ரூத் எங்கிருந்து தானியங்களைப் பெற்றாள்? (ரூத். 2:3).
- ரூத் வயலில் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாள்? (7)
- ரூத் ஏழையும் அயல்தேசத்தவளாயும் இருந்ததால் போவாஸ் அவளிடம் தவறாக நடந்து கொண்டானா? (14-15).
- தனது ஏழை மாமிக்கு உதவ ரூத் என்ன செய்ய வேண்டி இருந்தது? (18)

**அதிகாரம் 3: விளக்கவும்**

- சொந்தக்காரனான போவாசிடம் தன்னை மணந்து தன்னுடைய உரிமையைக் காக்குமாறு ரூத் தைரியமாகக் கேட்கிறாள்.
- பாதிக்கப்பட்ட ஒருவனை வன்முறை, வறுமை, வாரீசின்றி மரித்தல் ஆகியவற்றில் இருந்து விடுவிக்கவும், அவனுக்காக பழிவாங்கவும், பழைய சம்பிரதாயப்படி நெருங்கிய ஓர் ஆண்

உறவினனுக்கு கடைமையாக இருந்தது.

- நம்மை சாத்தானிடம் இருந்து இரட்சித்த நமது இரட்சகாராகிய இயேசுவுக்கு போவாஸ் ஓர் உதாரணம்.

**அதிகாரம் 4: விளக்கவும்**

- ரூத்துவுக்கு மிகவும் நெருங்கிய உறவினனான ஒருவனிடம் போவாஸ் மிகவும் ஞானமாய் பேசி அவன் போவாஸ் ரூத்தை விவாகம் செய்ய ஒத்துக்கொள்ளும்படி செய்தான்.
- போவாசும் ரூத்தும் திருமணம் செய்து கொண்டு தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். வர்களுடைய குழந்தையை நகோமி வளர்த்தாள்.
- இயேசுவின் மூதாதையான மாபெரும் அரசன் தாவீதுக்கு ரூத் பெரிய பாட்டியாக இருந்தாள்.

ரூத்தின் கதையில் சில பகுதிகளை நாடகம் ஆக்கலாம். இந்த நாடகத்தை ஆராதனை வேளையின் போது அரங்கேற்ற சபைத்தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும். ஆயத்தம் செய்வதில் பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு உதவி செய்யட்டும்.

ரூத், நகோமி, கதை கூறுபவர் (கதைச் சுருக்கம் கூறி, பேச, நடிக்க வேண்டியவற்றை ஞாபகப்படுத்துகிறவர்), ஆகிய வேடங்களை பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள் ஏற்கட்டும்.

சிறிய பிள்ளைகள், ஓர்பாள், வேலைக்காரர்கள் (தானியத்தைக் குறிக்க இலைகள் அல்லது குச்சிகளை வைத்துக் கொள்ளவும்) ஆகிய வேடங்களை ஏற்கவும்.

## நாடகம்

**கதை கூறுபவர்:** ரூத் ஒன்றாம் அதிகாரத்தில் இருந்து கதையின் முதல் பகுதியைச் சுருக்கமாகக் கூறவும். பின், “ரூத்திடமும் ஓர்பாளிடமும் நகோமி கூறுவதைக் கேளுங்கள்.”

**நகோமி** : “நமது கணவர்கள் இறந்து போய் விட்டனர். சாப்பாட்டிற்காக நான் இஸ்ரவேல் நாட்டுக்குப் போகப் போகிறேன். நீங்கள் மறுபடியும் உங்கள் குடும்பத்தாரிடமே சென்று விடுங்கள்.”

**ஓர்பாள்** : நகோமியைக் கட்டிப் பிடித்து அழுது விட்டு பின் நடந்து போய் விடுகிறாள்.

**ரூத்** : முழங்கால் போட்டு நகோமியிடம் கெஞ்சுகிறாள், “நீர் எங்கு போனாலும் நான் அங்கு வருவேன். நீர் வாழ்கின்ற இடத்தில் வாழ்வேன். உமது மக்களே என் மக்கள். உமது தெய்வமே என் தெய்வம். நீர் இறக்கும் இடத்திலேயே நானும் இறப்பேன்!”

**கதை கூறுபவர்:** அத். 2 லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைச் சுருக்கமாகக் கூறவும். பின், “ரூத் நகோமியிடம் கூறுவதைக் கேளுங்கள்.”

**ரூத்** : “அம்மா! நமக்கு உணவு வேண்டும். கதிர் அறுக்கிறவர்கள் விட்டும் போகும் தானியத்தை நான் சேகரித்து வருகிறேன்.!”

(வேலையாட்கள் அருகில் போய் கதிர் பொறுக்குகிறாள்).

**போவாஸ்** : “என்னுடைய வயலில் கதிர் பொறுக்கும் அப் பெண் யார்?”

**வேலையாட்கள்:** “அவள் தான் ரூத் என்ற அந்நிய தேசத்தாளாகிய ஏழை விதவை. அவள் கடுமையாக வேலை செய்கிறாள். ஓய்வே எடுப்பதில்லை.”

**போவாஸ்:** ரூத்தின் அருகில் சென்று, “ரூத் நீ நகோமியிடம் காட்டிய அன்பைப் பற்றி கேள்விப்பட்டேன். என் வயலில் நீ தானியம் சேகரித்து, என் வேலையாட்களுடனேயே சாப்பிடலாம்!” (வேலையாட்களிடம்) “ரூத் தானியம் பொறுக்கட்டும். அவளைத் தொந்தரவு செய்ய வேண்டாம். வேண்டுமென்றே அவள் எடுக்க சில தானியங்களை சிந்த விடுங்கள்!”

**கதை கூறுபவர்:** “அன்று மாலை ரூத் நகோமியிடம் கூறுவதைக் கேளுங்கள்.”

**ரூத்** : “அம்மா! இவ்வளவு தானியத்தை நான் இன்று போவாசின் வயலில் இருந்து சேகரித்தேன். இதோ உங்களுக்கு!”

**நகோமி** : “மகளே! போவாஸ் நமக்கு நெருங்கிய சொந்தக்காரன்! நம்மைப் போன்ற ஏழை விதவைகளிடம் இரக்கம் உள்ளவன். அவனை தேவன் ஆசீர்வதிக்கட்டும். இந்த அறுவடை காலத்தில் வேறு எந்த வயலிலும் பொறுக்க வேண்டாம்.”

**கதை கூறுபவர்:** “ரூத்தின் புத்தகத்தில் மீதிக் கதையை சுருக்கமாகக் கூறவும். மேலே 3,4 அத்தியாயங்களின் கீழ் கூறப்பட்டுள்ள விளக்கங்களை மீண்டும் கூறவும். உதவிய அனைவருக்கும் நன்றி கூறவும்.”

**கேள்விகள்:** இந்தக் கதையை சிறுவர்கள் பெரியவர்களுக்கு கூறி, அத்தியாயம் 2ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளை சிறுவர்கள் பெரியவர்களிடம் கேட்கவும்.

படம்: தானியக் கதிரின் படத்தை வரைக. பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும். இந்தப் படத்தை ஆராதனை வேளையின் போது காட்டி ரூத்தும் போவாசும் எவ்வாறு குடும்ப அங்கத்தினர்களை கவனித்து தங்கள் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொண்டனர் என்பதை விளக்கவும்.

தேவன் குடும்ப உறுப்பினர்களை உபயோகித்து எவ்வாறு நம்மை கவனித்துக் கொள்கிறார் என்பதற்கு வேறு உதாரணங்களை விவாதிக்கவும். பெரியவர்களும் சிறுவர்களும் உதாரணம் தரட்டும். மேலும் கேட்க வேண்டியது:

எந்த ஒரு மாபெரும் குடும்பத்தின் நித்தியகால உறுப்பினராக தேவன் நம்மை உருவாக்கியுள்ளார்?

**சங்கீதம்:** 31:10, 15, 20, 30 ஐ நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

ரூத் 1:16-17 ல் உள்ள ரூத்தின் வார்த்தைகளை பயன்படுத்தி பெரிய பிள்ளைகள் கவிதையோ பாடலோ எழுதட்டும்.

**மனனவசனம்:** எபே 6:1-3.

ஜெபம்: “கர்த்தாவே! நாங்கள் எங்கள் குடும்பங்களுக்காக நன்றி செலுத்துகிறோம். நாங்கள் எங்கள் பெற்றோரை கனப்படுத்தி, நீர் எங்களுக்கு சேவை செய்தது போல நாங்களும் ஒருவருக்கொருவர் சேவை செய்ய உதவும். நீரே இரட்சகர் என்பதை எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அறிய உதவும்.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net